**People's Watch**
No.6, Vallabai Road, Chokkikulam, Madurai - 625 002.
Phone: 0452-2531874 & 2539520 Fax: 0452 - 2531874
E.mail: info@pwtn.org
Web: www.peopleswatch.org

20.08.11

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்
தமிழ்நாடு அரசு தலைமைச் செயலகம்
அண்ணாசாலை
சென்னை 60002

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு

மக்கள் கண்காணிப்பகத்தின் இனிய வணக்கம்.

மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு மக்கள் கண்காணிப்பகம் அமைப்பு கடந்த 16 ஆண்டுகளாக, தமிழக அளவிலும், 2006 முதல் இந்தியா முழுவதிலுமுள்ள 18 மாநிலங்களிலும், மனித உரிமைக் காப்புப் பணியில் சர்வதேச மனித உரிமை அமைப்புகளுடன் இணைந்து செயல்பட்டு வருகிறது.

எவ்வித அரசியல் கட்சி சார்புமின்றியும், தனி நபர் மீதான விருப்பு, வெறுப்புக்களைக் கடந்தும் மனித உரிமை அரங்கில் அரசைக் கண்காணித்து மனித உரிமைக் கலாச்சாரத்தை வளர்த்தெடுக்கும் விதமாக மனித உரிமைகளைக் காத்தல், வளர்த்தல், வாழ்நெறியாக்கல் என்ற முறையில் எங்களது பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தமிழகத்தில் கடந்த 13.08.2011 முதல் 19.08.2011 முடிய எங்கள் அமைப்பின் கவனத்திற்கு வந்த மனித உரிமை மீறல் செய்திகளை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம்.

**13-08-2011 முதல் 19-08-2011 முடிய இவ்வாரத்தில் எங்கள் கவனத்திற்கு வந்த மனித உரிமை மீறல் செய்திகள்**

| | | |
|---|---|---|
| 1. | என்கவுண்டர்/காவல் மரணம் | – |
| 2. | சிறைக் கைதி மரணம் / வன்முறை | 1 |
| 3. | பெண்கள் மீதான வன்முறை | 22 |
| 4. | காவல் நிலையச் சித்திரவதை | 3 |
| 5. | வகுப்பறை வன்முறை | 3 |
| 6. | தலித்துகள் மீதான வன்முறை | 3 |
| 7. | அரசு அதிகாரிகள் / காவல் துறையினர் லஞ்சம் பெற்றது. | 1 |
| 8. | மருத்துவர்கள் அலட்சியம் | 1 |
| 9. | கொத்தடிமை | – |
| 10. | பெண் சிசு கொலை | 1 |
| 11. | குழந்தை திருமணம் | – |
| 12. | குழந்தை தொழிலாளர் மீட்பு/ வன்முறை | 9 |
| 13. | மீனவர்கள் மீது தாக்குதல் | 3 |
| 14. | கந்து வட்டிக் கொடுமை | – |
| 15. | கட்டப்பஞ்சாயத்து / சமூகப் புறக்கணிப்பு | 1 |
| 16. | ரேசன் அரிசி கடத்தல் | – |
| 17. | மணல் கொள்ளை | 2 |
| 18. | திருநங்கைகள் மீதான வன்முறை | – |

மக்கள் கண்காணிப்பகம்

| | | |
|---|---|---|
| 19. | பழங்குடியினர் மீதான வன்முறை | – |
| 20. | முதியவர்கள் மீதான வன்முறை | 1 |
| 21. | மாற்றுத்திறனாளர்கள் மீதான வன்முறை | – |
| 22. | பொதுவானவை | 1 |
| | மொத்தம் | 52 |

மேற்கண்ட சம்பவங்களில் தாங்கள் உடனடியாகத் தலையிட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம்.

இதுபோன்ற காவல் மரணங்களும், சித்திரவதைகளும் தொடர்ந்து நிகழா வண்ணம் தடுக்க ஆவன செய்ய வேண்டுகிறோம்.

நன்றி,

நம்பிக்கையுடன் மனித உரிமைப் பணியில்

**(ஹென்றி டிபேன்)**
நிர்வாக இயக்குநர்

**நகல்கள்:**

தமிழகத் தலைமை நிலையச் செயலாளர் மற்றும் உயரதிகாரிகள்

அனைத்து மாவட்ட ஆட்சியாளர்கள்

தமிழகக் காவல்துறைத் தலைவர் மற்றும் உயரதிகாரிகள்

அனைத்து மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர்கள்

அனைத்து மனித உரிமை ஆணையங்கள்

அனைத்து அரசியல் கட்சிகள்

மக்கள் கண்காணிப்பகம்

# தமிழகத்தில் மனித உரிமை மீறல்கள் - தொகுப்பு-32
## 13.08.2011 முதல் 19.08.2011 முடிய

| வ. எண் | செய்தி கிடைத்த நாள் | மாவட்டம் / பெயர் விபரம் மற்றும் சம்பவ விபரம் | பிரிவு | தகவல் பெற்றது. |
|---|---|---|---|---|
| 2071. | 15.08.2011 | **சென்னை மாவட்டம்:** வியாசர்பாடி சத்தியாநகரைச் சேர்ந்த கிருஷ்ணவேணி(50). அதிமுக மகளிர் அணி இணை செயலாளர் மகன் நந்தகுமார் மனைவி சிவரஞ்சனி(19). கூடுதல் வரதட்சணை கேட்டு கணவர் மற்றும் மாமியார் துன்புறுத்தியதோடு 3 மாத கர்ப்பிணியான சிவரஞ்சனியை எரித்துக் கொலை. நந்தகுமார் கைது. | பெண்கள் மீதான வன்முறை & கொலை | மார்சல் |
| 2072. | 13.08.2011 | **சிவகங்கை மாவட்டம்:** தமிழக முதல்வரின் தனிப்பிரிவு அதிகாரிகள் காரைக்குடியில் மாணவியர் விடுதி, பள்ளி மாணவியர் விடுதி, தேவகோட்டையில் செயல்படும் ஆதி திராவிடர் மாணவ விடுதியில் சோதனை செய்தனர். இவ்விடுதிகளில் காப்பாளரின் கெடுபிடி மற்றும் உணவு, பதிவேடு, விடுதிகளின் ஜன்னல், அடிப்படை வசதிகள் போன்றவற்றில் முறைகேடு நடப்பதாக புகார். | தலித்துகள் மீதான வன்முறை | தினமலர் |
| 2073. | 13.08.2011 | **கன்னியாகுமரி மாவட்டம்:** நாகர்கோவில் பகுதியைச் சேர்ந்த அசோக்குமார். காங்கிரஸ் பிரமுகரான இவர் அன்னை இந்திரா பாராமெடிக்கல் மற்றும் ஏர்ஹோஸ்டல் பயிற்சி நிறுவனங்களை நடத்தி வருகிறார். இந்நிறுவனத்தில் பயிற்சிக்கு வந்த தூத்துக்குடியைச் சேர்ந்த மாணவி கார்த்திகா(21)வை அசோக்குமார் பாலியல். அசோக்குமார் கைது. | பெண்கள் மீதான பாலியல் வன்முறை | தினமலர் |
| 2074. | 13.08.2011 | **கோவை மாவட்டம்:** கோவை மாநகர ஆயுதப்படை வளாகத்தில் போலீஸ் குடியிருப்புகள் மற்றும் மத்திய சிறைக்கு காஸ் வினியோகம் செய்யும் பொறுப்பாளராக ஏட்டு ஜான்பால் பணிபுரிந்தார். கடந்த ஐந்து ஆண்டுகளில் ரூபாய் 5 லட்சம் முறைகேடு செய்ததாக ஏட்டு ஜான்பால் பணியிடை நீக்கம். | மோசடி & காவல் நிலையச் சித்திரவதை | தினமலர் |
| 2075. | 14.08.2011 | **விருதுநகர் மாவட்டம்:** ஆவடையாபுரம் கிராமம், இங்கு தனியர் பட்டாசு ஆலை உள்ளது. மத்தாப்பு ரகங்களுக்கு மருந்துக்கலவை தயாரிக்கும் பணியின்போது உராய்வு ஏற்பட்டதில் வெடி விபத்து. பணியாளர் வீராசாமி மரணம். 3 பேர் படுகாயம். | பட்டாசு ஆலை தீ விபத்து | தினமணி |
| 2076. | 14.08.2011 | **காஞ்சிபுரம் மாவட்டம்:** செய்யூர் வட்டத்திற்கு உட்பட்ட முகையூர் கிராமத்தில் உள்ள முத்தாலம்மன் கோயிலுக்குள் நுழைய தலித் மக்களுக்கு அனுமதி மறுப்பு. | தலித்துகள் மீதான வன்முறை | தீக்கதிர் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| 2077. | 14.08.2011 | **மதுரை மாவட்டம்:** உசிலம்பட்டி அருகே கவனம்பட்டி ஓடையில் அனுமதியின்றி மணல் அள்ளிய பால்பாண்டி, மணிமாறன் கைது. | மணல் கொள்ளை | தினகரன் |
| 2078. | 14.08.2011 | **மதுரை மாவட்டம்:** திருமங்கலம் அருகே பாடனேரியைச் சேர்ந்த கந்தசாமி மகள் மலர்(16). அதே பகுதியைச் சேர்ந்த செல்வகுமார் மலரை கடத்திச் சென்றதாகப் புகார். | பெண்கள் மீதான வன்முறை & கடத்தல் | தினகரன் |
| 2079. | 14.08.2011 | **வேலூர் மாவட்டம்:** அரக்கோணம் விண்டர் பேட்டையைச் சேர்ந்த அலெக்ஸ் மனைவி லட்சுமி. அலெக்ஸின்தாய் லில்லி(90). உடல்நலக்குறைவால் அவதிப்பட்ட தாயை குடிபோதையில் அலெக்ஸ் அடித்துக் கொலை செய்ததாக புகார். | பெண்கள் மீதான வன்முறை &கொலை &முதியோர் மீதான வன்முறை | தினகரன் |
| 2080. | 14.08.2011 | **திருச்சி மாவட்டம்:** திருச்சி மணச்சநல்லூர் அருகே மூவராயபாளையத்தைச் சேர்ந்த செல்லம்மாள். ஜெயசீலனும் காதலித்துத் திருமணம் செய்தனர். ஜெயசீலன் இறந்து நான்கு ஆண்டுகளுக்கு பின் ஜெயசீலனின் தம்பி குணசீலனை செல்லம்மாள் மறுமணம் செய்ததால் ஊர்க்காரர்கள் கட்டப்பஞ்சாயத்து செய்து செல்லம்மாள் மற்றும் குடும்பத்தினரை ஊரை விட்டு ஒதுக்கி வைப்பு. | பெண்கள் மீதான வன்முறை & கட்டப்பஞ்சாயத்து | தினகரன் |
| 2081. | 14.08.2011 | **நெல்லை மாவட்டம்:** மதுரை திருமங்கலத்தைச் சேர்ந்த பாலமுருகன்(34) இவரது இருசக்கர வாகனம் திருடு போனதாக புகார். பாலமுருகனுக்கு புதிய இருசக்கர வாகனம் வாங்கிக் கொடுத்து காவலர்கள் வழக்கை முடித்தனர். திருடுபோன இருசக்கர வாகனத்திற்கு பதிலாக போலி நம்பர் பிளேட் தயாரித்து புதிய இருசக்கர வாகனம் முத்துக்குமாருக்கு இன்ஸ்பெக்டர் நாகராஜ் வழங்கியுள்ளார். எஸ்.பி நாகராஜை சஸ்பெண்ட் செய்ய உத்தரவு. | காவல் நிலையச் சித்திரவதை | தினகரன் |
| 2082. | 15.08.2011 | **காஞ்சிபுரம் மாவட்டம்:** காஞ்சிபுரம் பிள்ளையார்பாளையம் கச்சியப்பன் தெருவில் வசிக்கும் நாகபூசனம் மகள் ஹேமபிரியா(22). ஹேமபிரியா என்ஜினீயங் கல்லூரியில் படித்து வந்தார். ஹேமபிரியா மற்றும் அவரது தாய் இருவரும் வீட்டில் தூக்குப்போட்டுத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 2083. | 15.08.2011 | **மதுரை மாவட்டம்:** திருநகர் அருகே உள்ள பி.ஆர்.சி காலனியைச் சேர்ந்த தயானந்தன் மனைவி சாந்தி(25). திருமணமாகி ஓராண்டு ஆன நிலையில் சாந்தியை காணவில்லை என புகார். | பெண்கள் மீதான வன்முறை | தீக்கதிர் |
| 2084. | 15.08.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை பள்ளபச்சேரியைச் சேர்ந்த கிருஷ்ணன் மகள் 8ம் வகுப்பு படித்து வந்தார். இந்நிலையில் அவருக்கு வேலை | குழந்தைகள் மீதான வன்முறை | தீக்கதிர் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | வாங்கித் தருவதாக கூறி வேங்கடசமுத்திரம் பகுதியைச் சேர்ந்த வினோத்(35) கடத்திச் சென்றதாகப் புகார். | & கடத்தல் | |
| 2085. | 15.08.2011 | **தூத்துக்குடி மாவட்டம்:** கோவில்பட்டி அருகே உள்ள நாலாட்டின்புதூர் போலீஸ் சரகம் வி.பி. சித்தன் தெருவைச் சேர்ந்த முருகன் மனைவி செல்லம்மாள்(45) மகன் பலவேசம்(21). தாயின் நடத்தையில் சந்தேகப்பட்டு பலவேசம் திட்டியதால் இருவருக்கும் தகராறு. ஆத்திரமடைந்த பலவேசம் செல்லம்மாளை அரிவாளால் வெட்டிக் கொலை செய்ததாக பலவேசம் கைது. | பெண்கள் மீதான வன்முறை & கொலை | தீக்கதிர் |
| 2086. | 15.08.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரையில் மாட்டுத்தாவணி பேருந்து நிலையத்தில் சென்னை செல்லும் பேருந்து நிறுத்துப்படும் பகுதியில் வாய் பேசமுடியாத, போலியோவால் கை, கால்கள் பாதிக்கப்பட்டு நடக்க முடியாத மூன்றரை வயது பெண் குழந்தையை பெற்றோர் விட்டுச் சென்றதாக புகார். | குழந்தைகள் மீதான வன்முறை | தினகரன் |
| 2087. | 15.08.2011 | **திருச்சி மாவட்டம்:** திருச்சி, வயலூர் மேற்கு, கொத்தட்டையை சேர்ந்த ரஞ்சிதம், மகன் மாரிமுத்து(17). பிளஸ்2 படிக்கும் மாணவன். தந்தை கொடுத்த பணத்தை தொலைத்ததால் தந்தை திட்டுவார் என பயந்த மாரிமுத்து தூக்கிட்டுத் தற்கொலை. | குழந்தைகள் மீதான வன்முறை & தற்கொலை | தினகரன் |
| 2088. | 15.08.2011 | **இராமநாதபுரம் மாவட்டம்:** கச்சத்தீவு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்த தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் வழிமறித்து படகை சேதப்படுத்தியதோடு, அவர்கள் பிடித்து வைத்திருந்த மீன்களை கடலில் கொட்டி விரட்டியடித்ததாக பாதிக்கப்பட்ட மீனவர்கள் புகார். | மீனவர்கள் மீதான வன்முறை | தினமலர் |
| 2089. | 15.08.2011 | **நெல்லை மாவட்டம்:** நில மோசடி வழக்கில் பாளை சிறையில் உள்ள, மதுரை தி.மு.க, பிரமுகர் பொட்டுசுரேசுடன் ஒரே பிளாக்கில் உள்ள ஆயுள் கைதி முத்துப்பாண்டி. பொட்டு சுரேசை சந்திக்க வந்த திமுகவினர் அவருக்கு தேவையான அனைத்தையும் வாங்கிக் கொடுத்தனர். இதை தட்டிக்கேட்டு முத்துப்பாண்டியை வார்டன்கள் நான்குபேர் தாக்கியதாகவும், மனமுடைந்த முத்துப்பாண்டி பிளேடை உடைத்து கடித்து மென்று தற்கொலைக்கு முயற்சி. | சிறைக்கைதி தற்கொலை முயற்சி & சிறைச்சாலை வன்முறை | தினமலர் |
| 2090. | 15.08.2011 | **விருதுநகர் மாவட்டம்:** தூத்துக்குடி எட்டையாபுரம் தாபாத்தி என்ற ஊரைச் சேர்ந்த ராஜசிங்கம் மகள் தாமரைச்செல்வி(20). விருதுநகர் அரசு மருத்துவமனை நர்சிங் கல்லூரியில் விடுதியில் தங்கி இரண்டாம் | பெண்கள் மீதான வன்முறை | தினமலர் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஆண்டு படித்து வந்தார். விடுதியில் துணியால் கைகள் கட்டப்பட்ட நிலையில் மாணவி தூக்கில் தொங்கிய நிலையில் மரணம். மாணவியின் சாவில் மர்மம் இருப்பதாக பெற்றோர் புகார். | | |
| 2091. | 16.08.2011 | **நாகை மாவட்டம்:** கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற வெள்ளப்பள்ளம் மீனவர்கள் 4 பேரை இலங்கை கடற்படையினர் நிர்வாணமாக்கி, கடலில் நீத்த சொல்லி துன்புறுத்தியதோடு அவர்கள் பிடித்துக் வைத்திருந்த மீன்களை பறித்துக் கொண்டு விரட்டியதாக பாதிக்கப்பட்ட மீனவர்கள் புகார். | மீனவர்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 2092. | 16.08.2011 | **சென்னை மாவட்டம்:** திருவேற்காடு வெங்கடேசன் மனைவி மகேஸ்வரி. கணவர் கடுமையாக துன்புறுத்தியதோடு, மண்ணெண்ணெய் ஊற்றி மகேஸ்வரியை கொலை செய்ததாக வெங்கடேசன் மீது புகார். | பெண்கள் மீதான வன்முறை & கொலை | டெக்கான் கிரனிக்கல் |
| 2093. | 16.08.2011 | **மதுரை மாவட்டம்:** மேலூர் தெற்கு தெருவைச் சேர்ந்த பூபாலன் மனைவி ராஜேஷ்வரி. இவர் வீட்டின் கதவைத் திறந்துவைத்து தூங்கியபோது பைக்கில் வந்த மர்ம நபர் அவரது 7 பவுன் நகையை பறித்துச் சென்றதாகப் புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினமணி |
| 2094. | 16.08.2011 | **சிவகங்கை மாவட்டம்:** மானாமதுரை அருகே அன்னவாசல் கிராமத்தைச் சேர்ந்த தனபாண்டிக்குச் சொந்தமான டிராக்டரில் சக்குடி அருகேயுள்ள ஆற்றில் அனுமதியின்றி மணல் கடத்திய டிரைவர் செந்தில், மாரிமுத்து இருவரும் கைது. | மணல் கொள்ளை | தினமலர் |
| 2095. | 16.08.2011 | **விருதுநகர் மாவட்டம்:** திருத்தங்கல் அருகே ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி தலைமையாசிரியர் சித்துராஜபுரத்தைச் சேர்ந்த தனசேகர்(51). தனசேகர் எட்டாம் வகுப்பு படிக்கும் மூன்று மாணவிகளிடம் ஆபாசமாக பேசி, சில்மிஷம் செய்ததாக புகார். மாணவிகளின் பெற்றோர் பள்ளி முற்றுகை. | வகுப்பறை வன்முறை & குழந்தைகள் மீதான பாலியல் வன்முறை | தினமலர் |
| 2096. | 17.08.2011 | **மதுரை மாவட்டம்:** உத்தங்குடியில் இரு அங்கன்வாடி மையங்களில் 25 குழந்தைகள் பயில்கின்றனர். இங்குள்ள அங்கன்வாடியின் மேற்கூரை பெயர்ந்து விழுமளவுக்கு மோசமான இருப்பதால் குழந்தைகள் அருகில் உள்ள கலையரங்கு மேடையில் தங்கவைக்கப்பட்டுள்ளதாகப் புகார். | குழந்தைகள் மீதான வன்முறை | தினமலர் |
| 2097. | 17.08.2011 | **விருதுநகர் மாவட்டம்:** விருதுநகர் லட்சுமிநகரைச் சேர்ந்த சந்திரகாந்தன்(33). நோயால் பாதிக்கப்பட்ட சந்திரகாந்தன் விருதுநகர் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். நோயாளியுடன் உறவினர்கள் யாரும் இல்லாததால் மருத்துவமனை நிர்வாகம் அவரை அருகில் | மருத்துவர்கள் அலட்சியம் | தினமலர் |



மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | உள்ள பூங்காவில் வீசி சென்றதாகப் புகார். | | |
| 2098. | 17.08.2011 | **திருச்சி மாவட்டம்:** மணப்பாறை அருகே சின்னமணப்பட்டியைச் சேர்ந்த கொத்தனார் கிருஷ்ணன் மனைவி லட்சுமி(30). இவர்களது குழந்தைகள் தேவராஜன்(11), அன்புராஜன்(9). மாமியார் மாரியாயி லெட்சுமியை திட்டியதால் மனமுடைந்த லட்சுமி இரு குழந்தைகளையும் கிணற்றில் தள்ளிவிட்டு லெட்சுமியும் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | தினமலர் |
| 2099. | 17.08.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை பாலமேட்டைச் சேர்ந்த அமலா(23). காமராஜர்புரத்தைச் சேர்ந்த நாகராஜன்(26). அமலாவைத் திருமணம் செய்துக் கொள்வதாகக் கூறி பாலியல். அமுதா கர்ப்பம். ஜாதியைக் காரணம் காட்டி அவரது குடும்பத்தினர் மற்றும் நாகராஜன் திருமணத்திற்கு மறுப்பதாக அமலா புகார். | பெண்கள் மீதான பாலியல் வன்முறை | தினகரன் |
| 2100. | 17.08.2011 | **மதுரை மாவட்டம்:** கல்லுப்பட்டியைச் சேர்ந்த ரவிக்குமார் மனைவி வைரக்காள்(19). அழகர்கோயிலில் ஆடித்திருவிழாவிற்கு சென்ற வைரக்காளைக் காணவில்லை என புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 2101. | 18.08.2011 | **விருதுநகர் மாவட்டம்:** விருதுநகரிலிருந்து 7கி.மீ தொலைவில் உள்ள நந்திரெட்டிபட்டி கிராமம். இவ்வூருக்கு பேருந்து இயக்கப்படாததால் இங்குள்ள மாணவ, மாணவியர் படிப்பதற்காக 6 கி.மீ.தொலைவில் உள்ள வடமலைக்குறிச்சி அரசு மேல்நிலைப்பள்ளிக்குச் சென்று வருகின்றனர். அரசு வழங்கிய இலவச பஸ் பாஸ் இருந்தும் பயணம் செய்ய பேருந்து இயக்கப்படாமல் நடந்தே செல்வதாக புகார். | குழந்தைகள் மீதான வன்முறை | தீக்கதிர் |
| 2102. | 18.08.2011 | **நெல்லை மாவட்டம்:** நெல்லை சாந்திநகரைச் சேர்ந்த கமலநாதன் மகள் ரீட்டா(35). ரீட்டாவின் கணவர் அருள் ஆர்ம்ஸ்ட்ராங்கை துரத்தியடிப்பு. ரீட்டாவின் தங்க நகை, பணத்தை மற்றும் நிலத்தை சன்டிவி நிருபர் ராமலிங்கம் பறிப்பு. கமலநாதன் ராமலிங்கம் மீது புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினமலர் |
| 2103. | 18.08.2011 | **தூத்துக்குடி மாவட்டம்:** பிரையண்ட நகரைச் சேர்ந்த ராஜ்குமார் மனைவி பிளவர். தூத்துக்குடி மாநகராட்சி 16 வது தி.மு.க. கவுன்சிலரான இவரது மகன் விஷால் உமேஷ்(41/2). பள்ளிக்குச் சென்ற சிறுவமனை டிரைவர் கருப்பசாமியுடன் சேர்ந்து சிலர் கடத்திச் சென்றதாக புகார். | குழந்தைகள் மீதான வன்முறை & கடத்தல் | தினமலர் |
| 2104. | 18.08.2011 | **மதுரை மாவட்டம்:** கரும்பாலையில் மேற்கூரை சேதமடைந்த நிலையில் உள்ள அங்கன்வாடியில் ஆபத்தான சூழ்நிலையில் குழந்தைகள் படிப்பதாகப் புகார். | குழந்தைகள் மீதான வன்முறை | தினகரன் |
| 2105. | 18.08.2011 | **திருவள்ளுவர் மாவட்டம்:** திருவள்ளுவர் டிஎஸ்பி ஸ்ரீதேவி அடிதடி வழக்கில் பிரசன்னா | பெண்கள் மீதான | தினகரன் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | என்பவரை கைது செய்தார். திருவள்ளூர் மணவாளன் நகரைச் சேர்ந்த நடராஜன்(45) சென்னை தலைமை செயலகத்தில் ஐஏஎஸ் அதிகாரிகயாக பணியாற்றுவதாகவும் பிரசன்னாவை விடுவிக்குமாறு இன்ஸ்பெக்டர் தயாளன் மற்றும் ஸ்ரீதேவிக்கு கொலை மிரட்டல் விடுப்பு. போலி ஐஏஎஸ் அதிகாரியாக நடித்த நடராஜன் கைது. | வன்முறை | |
| 2106. | 18.08.2011 | **திண்டுக்கல் மாவட்டம்:** கொடைக்கானல் அருகேயுள்ள அட்டுவம்பட்டியைச் சேர்ந்த சந்திரபாண்டி(32) மனைவி சாந்தி(25) கணவன் மனைவி குடும்பத் தகராறில் மனமுடைந்த சாந்தி தன் இரு குழந்தைகளுடன் மாயம். மனமுடைந்த சந்திரபாண்டி விஷம் குடித்துத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 2107. | 18.08.2011 | **மதுரை மாவட்டம்:** கீழவளவு அருகே உள்ள வாச்சாம்பட்டியைச் சேர்ந்த சுரங்கமலையன் மகன் லெனின் வேப்பணெண்ணெய் குடித்ததற்காக மேலூர் அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். பணியில் இருந்த மருத்துவமனை மருத்துவர் மங்கையற்கரசியை சுரங்கமலையன் அவதூறாக பேசியதோடு, தாக்கியதால் மருத்துவர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். | பெண்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 2108. | 18.08.2011 | **மதுரை மாவட்டம்:** ஆர்கே.பேட்டையை அடுத்த அம்மையார்குப்பத்தைச் சேர்ந்த துளசிராமன் மினி பஸ் அதிபர். தனது மினி பேருந்து உரிமத்தை புதுப்பிப்பதற்காக திருவள்ளூர் வட்டார போக்குவரத்து அலுவலக சூப்பிரண்ட் விஜயகுமாரை அணுகினார். அவர் ரூபாய் 5000 லஞ்சம் கேட்டதாக புகார். | லஞ்சம் | தினத்தந்தி |
| 2109. | 18.08.2011 | **வேலூர் மாவட்டம்:** ஆம்பூர் அருகே உள்ள சோலூர் கிராமத்தைச் சேர்ந்த கோமதி(23). கோமதிக்கு பிரசவத்தில் பெண் குழந்தை பிறந்தது. பிறந்து 15 நாட்களே ஆன குழந்தையை தண்ணீர் தொட்டியில் போட்டு கொலை. | சிசுக்கள் மீதான வன்முறை & கொலை | தினத்தந்தி |
| 2110. | 18.08.2011 | **மதுரை மாவட்டம்:** அருள்தாஸ்புரம் ஜெயக்கொடி காம்பவுண்டைச் சேர்ந்த சாகுல்அமீது மனைவி பரக்கத்நிஷா(34). வீட்டில் இருந்து வெளியே சென்ற பரக்கத்நிஷாவைக் காணவில்லை எனப் புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 2111. | 18.08.2011 | **திருவண்ணாமலை மாவட்டம்:** தண்டராம்பட்டு தாலுகா பெருங்குளத்தூரில் அரசு மேல்நிலைப்பள்ளி உள்ளது. இப்பள்ளியின் தலைமை ஆசிரியர் குப்புசாமி. தலைமை ஆசிரியர் பள்ளிக்குத் தாமதமாக வந்ததால் மாணவ, மாணவியர், மற்றும் ஆசிரியர்கள் வெளியில் காத்திருந்ததாகப் புகார். தலைமை ஆசிரியர் குப்புசாமி பணியிடை நீக்கம். | வகுப்பறை வன்முறை | தமிழ்முரசு |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| 2112. | 18.08.2011 | **மதுரை மாவட்டம்:** கைத்தறி நகரைச் சேர்ந்த சந்திரசேகரன் மகள் ஜெயந்தி(19). அதே பகுதியில் ஸ்டூடியோவில் வேலைக்குச் சென்ற ஜெயந்தியை காணவில்லை எனப் புகார். | பெண்கள் மீதான வன்முறை | தமிழ்முரசு |
| 2113. | 19.08.2011 | **சென்னை மாவட்டம்:** சென்னையைச் சேர்ந்த சுமதி மகன் அர்ஜுன். சுமதியிடம் இருந்த நகைக்கு ஆசைப்பட்டு அர்ஜுன் தன் மனைவி மாதவியுடன் சேர்ந்து தாயை நிர்வாணப்படுத்தி துன்புறுத்தியதாகவும் இதற்கு உடந்தையாக நீலாங்கரை காவல்துறையினர் இருந்ததாக புகார். | பெண்கள் மீதான வன்முறை & காவல் நிலைய சித்திரவதை | கலைஞர் டிவி |
| 2114. | 19.08.2011 | **மதுரை மாவட்டம்:** விளாங்குடி செங்கோல் நகரைச் சேர்ந்த ஹக்கீம் மனைவி பாத்திமா(19). பெரியார் பேருந்துநிலையம் அருகே வேலைக்குச் சென்ற பாத்திமாவை காணவில்லை எனப் புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 2115. | 19.08.2011 | **இராமநாதபுரம் மாவட்டம்:** இராமேசுவரத்தில் இருந்து 400 க்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் கடலுக்கு மீன் பிடிக்கச் சென்ற தமிழக மீனவர்கள் கச்சத்தீவு அருகே மீன் பிடித்தபோது இலங்கை கடற்படையினர் தமிழக மீனவர்கள் மீது வெடிகுண்டை வீசி தாக்குதல். பாதிக்கப்பட்ட மீனவர்கள் புகார். | மீனவர்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 2116. | 19.08.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை அழகர்கோவில் அருகே உள்ள அக்ஷயா தொண்டு நிறுவனம் உண்டு உறைவிடப் பள்ளி நடத்தியது. ஆதரவற்ற மற்றும் நரிக்குறவர் வகுப்பைச் சேர்ந்த 57 குழந்தைகள் படித்தனர். இந்நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட அனுமதி ரத்து செய்யப்பட்டது. நரிக்குறவர் வகுப்பைச் சேர்ந்த 32 குழந்தைகளுக்கு மாற்றுச்சான்றிதழ் கிடைக்காததால், வேறு பள்ளியில் சேர முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. | குழந்தைகள் மீதான வன்முறை | தினமணி |
| 2117. | 19.08.2011 | **விருதுநகர் மாவட்டம்:** அருப்புக்கோட்டை அருகே பாலவநத்தம் கிராமத்தில் தலித் காலனியில் வசித்து வந்த கருப்பாயி(70), சுப்பம்மாள்(70) வசித்து வந்தனர். வீட்டின் மேற்கூரை இடிந்து விழுந்ததில் கருப்பாயி மரணம். | தலித்துகள் மீதான வன்முறை | தீக்கதிர் |
| 2118. | 19.08.2011 | **திண்டுக்கல் மாவட்டம்:** கொடைக்கானல் அருகே பெரும்பள்ளம் மலைக்கிராமத்தில் ஊராட்சி ஒன்றிய ஆரம்பப்பள்ளி உள்ளது. பெரும்பள்ளம், பாறையாறு, சோழபட்டி மற்றும் ஆதிவாசி குழந்தைகள் படிக்கின்றனர். இப்பள்ளியில் ஆசிரியர்கள் வராததால் மாணவ, மாணவிகளின் பெற்றோர் பள்ளியை பூட்டி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். | வகுப்பறை வன்முறை | தினகரன் |

மக்கள் கண்காணிப்பகம்